[1974 மார்ச் 7

மருந்தாளுநர்கள் சம்பளம்

* 319 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

அரசினர் மருத்துவ மனையில் மருந்தாளுநர்களாகப் பணி யாற்றுபவர்களுக்கு அண்மையில் சம்பள உயர்வு கொடுக்கப்பட் டுள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஆம்.

சேலம் நகரில் சாக்கடை அமைப்புத் திட்டம்

* 320 வினு—திரு. கி. ஜெயராமன் :

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் நகரத்திற்கு பாதாளச் சாக்கடை (Underground Drinage) அமைப்புத் திட்டம் ஏதேனும் ஆய்வில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) இத்திட்டத்திற்கான உத்தேச மதிப்பீடு தயாரிக்கப் பட்டு வருகிறது.

திரு. கி. ஜெயராமன் : தலைவரவர்களே, ஏறத்தாழ 15 ஆண்டு களுக்கு முன்னலே இந்தத் திட்டம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டு, இடையிடையே நிறுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தை ஆய்வில் எடுத்துக்கொள்ளும் கால அளவு என்ன ? எப்போது ஆய்வு முடியும் ? அரசாங்கம் எந்த வகையில் கடன் கொடுக்க முன்வரும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இப்படிப் பட்ட திட்டங்கள் பல்வேறு கட்டங்களில் ஆராயப்பட்டிருக் கின்றன. முதன்முதலாக அங்கே புதை சாக்கடை மூலம் கழிவு நீர் அகற்றும் திட்டம் 1928-ம் ஆண்டில் ஆலோசிக்கப்பட்டு, அது நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னர் மேற்கொள்ளப் பட்ட பல்வேறு திட்டங்கள் நிதிநிலை இடம் தராததால் அவ்வப் போது இருந்த அரசாங்கங்களினுல் நிறைவேற்றப்படவில்லை.

1974 மார்ச் 7]

அதற்குப் பின்னர் சாக்கடை கால்வாய் அமைந்துள்ள பகுதிகளில் புதை சாக்கடை மூலம் கழிவு நீரை அகற்றும் திட்டத்தை மேற்கொள்ள வேண்டுமென்று 1964-ம் ஆண்டில் அரசு ஆணை மூலம் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் கழிவுநீர்க் குட்டை, கழிவு நீர் வாய்க்கால்களைச் சீரமைக்க 1961-ம் ஆண்டில் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தொடர்ந்து இத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வாய்ப்பின்மை காரணமாகக் கைவிடப்பட்டது. அண்மையில் ஒரு விரிவான திட்டம் தயாரிக்க ஆய்வு செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. 1968-ம் ஆண்டில் கழிவு நீர் அகற்றும் திட்டத்திற்கு வகை செய்கிற வகையில் சேலம் நகராட்சிக்கு ஒரு அடங்கல் வடிகால் திட்டம் வகுக்கப்படலாம் என்று தெரிவிக்கப்பட்டு, அது முடிக்கப் பட்டுள்ளது. மேலும் குடிநீர் வடிகால் வாரியத்தில் இத்திட்டம் ஆராயப்பட்டு, அரசின் ஏற்புக்கு அனுப்பிவைக்கப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, சேலம் நகரம் ஒரு மாவட்டத்தின் தலைநகர். ஆகவே, பாதாள சாக் கடைத் திட்டத்தைத் தாமதப்படுத்துவதனால் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, இந்த அரசு இனிமேலாவது இத் திட்டத்தைத் துரிதமாக நிறைவேற்ற ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, நான்கு ஆண்டுகளுக்கு முன்பே கழிவுநீர் அகற்றும் திட்டம் மேற்கொள்ளப் பட்டிருந்தும், குடிநீர் திட்டத்திற்கு முக்கியத்துவம் தரவேண்டு மென்று அரசு கருதியதால், குடிநீர் திட்டத்திற்குப் பெரும் தொகை செலவிட வேண்டியிருந்ததால் கழிவுநீர் அகற்றும் திட்டங் களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. ஆனால் மறுபடியும் இத் திட்டங்களைச் செயல்படுத்த அரசு கருதியிருக்கிறது. நிதி நிலைக்கேற்ப திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

பின்தங்கிய வகுப்பு மாணவர் விடுதிகள்.

* 321 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1973 ஆகஸ்டு 23-24 தேதிகளில் தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் பிற்பட்ட மாணவர் விடுதிகளை திடீர் சோதனையிட்டார்களா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?